காசி தமிழ்ச் சங்கமம் 5.0 · திருக்குறள் பயில்வோம்

# கல்வி பற்றிய பத்துக் குறள்கள்

அதிகாரம் 40 · கல்வி · Chapter 40 · Learning (Kalvi)

391 **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

கற்கப்படும் நூல்களை ஒருவன் பழுதில்லாமல் கற்க வேண்டும்; அவ்வாறு கற்றதால் அக்கல்விக்கேற்ப, அந்நூல்கள் சொல்லுகின்ற நெறியில் நடத்தல் வேண்டும்.

392 **எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

எண்ணென்றும் எழுத்தென்றும் சொல்லப்படும் கலைகள் இரண்டும் சிறப்புடைய உயிர்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

393 **கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்.**

கல்வியறிவு உடையவரே கண்ணுடையவர் என்று உயர்வாகச் சொல்லப்படுவார்கள்; கல்வியறிவு இல்லாதவர் முகத்தில் புண்கள் இரண்டை உடையவராகக் கருதப்படுவர்.

394 **உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்.**

யாவரையும் அவர் மகிழுமாறு சேர்ந்திருந்து, இனி இவரை எவ்வாறு காணப் போகிறோமென்று வருந்துமாறு பிரிதலாகிய தன்மை உடையது கற்றவர் தொழில்.

395 **உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்.**

செல்வர்முன் வறியவர் நிற்பதுபோன்று ஆசிரியர்முன் தாம் ஆசையால் தாழ்ந்திருந்து கற்றார் தலையாயவர். அவ்வாறு பணிந்திருத்தலுக்கு நாணம் கொண்டு கல்லாதவர் இழிந்தோராவர்.

396 **தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.**

மணலில் கேணி தோண்டிய அளவு ஊறும்; அதுபோல், மக்களுக்கு அறிவு, கற்ற கல்வி அளவு பெருகும்.

397 **யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு.**

கற்றவனுக்குத் தன் நாடும், தன் ஊரும் மட்டுமன்றி, எந்த நாடும் அவன் நாடாகும்; எந்த ஊரும் அவன் ஊராகும். அவ்வாறிருக்கும்போது, ஒருவன் இறக்குமளவும் தொடர்ந்து கல்லாது நாட்களைக் கழிப்பது ஏன்?

398 **ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து.**

ஒருவனுக்கு ஒரு பிறவியில் கற்ற கல்வியானது ஏழு பிறவியிலும் சென்று உதவும்.

399 **தாமின் புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

தாம் இன்பம் அடைதற்குக் காரணமாகிய கல்வியால் உலகத்தாரும் இன்பம் அடைதலால் கல்வியறிவு உடையார் மேலும் மேலும் கற்றலையே விரும்புவர்.

400 **கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

கல்வி ஒருவனுக்கு அழிவில்லாத சிறப்புடைய செல்வமாகும். மணியும் பொன்னும்போன்ற பிறவெல்லாம் செல்வம் ஆகா.

**காசி தமிழ்ச் சங்கமம் 5.0** · திருக்குறள் பயில்வோம்
கல்வி அமைச்சகம், இந்திய அரசு
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (CICT), சென்னை
மொழிபெயர்ப்புகள் © செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை · CC BY 4.0

kts.cict.in